**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8064877

1. District : கடலூர் PS: ஊ.த.க. பிரிவு Year: 2020 FIR No. 06/2020 Date: 17.10.2020
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption — Sections பிரிவுகள்: 7, 7A, 12
(ii) Act சட்டம்: (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Criminal Procedure Code — Sections பிரிவுகள்: 102
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from நாள் முதல்: 16.10.2020 16.30 hrs — Date to : நாள் வரை: 16.10.2020 21.00 hrs
Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 17.10.2020 — Time : நேரம் 1100 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - IV — Time : நேரம் 1100 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — கணினி தட்டச்சு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 6 கி.மீ. தென்மேற்கு
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி வட்டார போக்குவரத்து அலுவலகம், கடலூர்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் --

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A. அமுதா — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் –
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — (d) Nationality : நாட்டினம் இந்தியன் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் --- — Place of Issue : வழங்கப்பட்ட இடம் ---
(f) Occupation : தொழில் உதவி ஆய்வுக்குழு அலுவலர், — (g) Address : முகவரி கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம், கடலூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. A.சோமசுந்தரம், வயது 55, த/பெ. S.அழகர்சாமி, மோட்டார் வாகன ஆய்வாளர், நிலை–2, கடலூர்
2. P.சரத்ராஜ், வயது 28, த/பெ. பொற்செழியன், RTO டிரைவர் (Out sourcing), கடலூர்
3. J.தமிழ்மணி, வயது 50, த/பெ. ஜெகநாதன், நெ.259, நெல்லிக்குப்பம் மெயின் ரோடு, கோண்டூர், கடலூர்
4. E.அருளானந்தம், வயது 50, த/பெ. இருதயம், 44, ஆல்பேட்டை, மஞ்சக்குப்பம், கடலூர்
5. M.சரவணன், வயது 50, த/பெ. முருகேசன், தெற்கு தெரு, கீழ் சாத்திப்பட்டு, பண்ருட்டி தாலுக்கா

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதமில்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)
பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 17.10.2020 ந்தேதி பகல் 10.30 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியில் இருந்தபோது, அ.அமுதா, உதவி ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கடலூர் மாவட்ட ஆட்சியரகம், கடலூர் என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று கீழ்க்கண்டவாறு வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு; நாள் : 17.10.2020 அனுப்புநர் அ. அமுதா, உதவி ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம், கடலூர். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர். அய்யா, பொருள் : திடீர் ஆய்வு சோதனை – வட்டார போக்குவரத்து அலுவலகம், கடலூர், கடலூர் மாவட்டம் – திடீர் ஆய்வு சோதனை – முகாந்திரம் மற்றும் முகாந்திரம் இன்றி கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் – திடீர் ஆய்வு மகஜரில் கைப்பற்றுதல் – ஒப்படைப்பு – நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் மனு

(தொடர்ச்சி பக்கம் -3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

17/10/20

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
17.10.2020, 11.45 மணி

Name: பெயர் தி. சண்முகம்
Rank: நிலை ....................No. எண் .........
காவல் ஆய்வாளர்,
ஊ த க பிரிவு, கடலூர்.

சமர்ப்பித்தல் – சம்மந்தமாக. கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், கடலூர் (இருப்பு) உதவி ஆய்வுக்குழு அலுவலரான அ.அமுதா ஆகிய நான், 16.10.2020 ஆம் தேதி எனது அலுவலகத்தில் பணியில் இருக்கும் போது எனக்கு கிடைத்த தகவலின் படி கடலூர் மாவட்டம், கடலூர் கேப்பர் மலையில் உள்ள வட்டார போக்குவாத்து அலுவலகத்தில் டிரைவிங் ஸ்கூல் நடத்துபவர்கள், மற்றும் புரோக்கர்கள் போன்று செயல்படும் வெளிநபர்கள் 16.10.2020 அன்று கடலூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உள்ள அலுவலக ஊழியர்களை சந்தித்து, வரும் ஆயுதபூஜை பண்டிகை செலவு தொடர்பாக சந்தித்து பணம் கொடுக்க போவதாக கிடைக்க பெற்ற ரகசிய தகவலை பெற்று, உடனடியாக நான் புறப்பட்டு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு 15.30 மணிக்கு வந்து அங்கு பணியில் இருந்த ஆய்வாளர் D. சண்முகம் அவர்களிடம் எனக்கு கிடைத்த ரகசிய தகவலை தெரிவித்தும், மேலும் எனது தலைமையில் மேற்படி கடலூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு மதியம் சுமார் 16.30 மணிக்கு மேல் சென்றால் அங்கு டிரைவிங் ஸ்கூல் நடத்துபவர்கள் மற்றும் புரோக்கர்களாக செயல்படும் வெளிநபர்கள் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் கொடுத்திருந்த அல்லது கொடுக்க இருக்கின்ற பணத்தை ஆய்வு செய்து கைப்பற்றலாம், ஆய்வாளர் அலுவலகத்தில் இருந்த காவல் குழுவினருடன் ஆலோசனை செய்தார். பின்னர் நானும், ஆய்வாளர் சண்முகம் மற்றும் அவரது காவல் குழுவினர்களும் மாலை சுமார் 16.00 மணிக்கு இரண்டு அரசு வாகனங்களில் புறப்பட்டு கடலூர் கேப்பர் மலையில் உள்ள வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு சற்று வெளியே மறைவாக வாகனங்களை நிறுத்தினோம். சிறிது நேரம் எங்களது குழுவினர் அனைவரும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தை கண்காணித்து மதியம் சுமார் 16.30 மணிக்கு கிழக்கு பார்த்து அமைந்து இருக்கும் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு உள்ளே சென்றோம். முன் ஹாலில் நாற்காலியில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க தான் மோட்டார் வாகன ஆய்வாளர் எனவும், அவரிடம் என்னையும், ஆய்வாளரையும் மற்றும் காவல் குழுவினரையும் அறிமுகம் செய்து வைத்தேன். பின்னர் அவரை பற்றி விசாரித்த போது தன் பெயர் A.சோமசுந்தரம், வயது 55, த/பெ. S.அழகர்சாமி, மோட்டார் வாகன ஆய்வாளர், நிலை–2, கடலூர் என்றும் முகவரி நெ.12, ஸ்ரீதேவி நகர், திருப்பாபுலியூர், கடலூர், நிரந்தர முகவரி நெ.88, நேதாஜி ரோடு, மதுரை என அறிமுகம் செய்து கொண்டார். பின்னர் நான் மேற்படி அலுவலகத்தை, ஆய்வு செய்ய போகும் விவரத்தை தெரிவித்து, அவர் முன்னிலையில் நானும், எனது அறிவுரையின்படி ஆய்வாளர் சண்முகம் மற்றும் காவல் குழுவினருடன் சுயபரிசோதனை செய்துகாண்பித்து எங்களிடம் பணமோ பொருளோ இல்லை என்பதை உறுதி செய்து கொண்டோம். அப்போது என்னுடன் வந்த ஆய்வாளர், காவலர்கள் உதவியுடன் முன் ஹாலில் இருந்த சில நபர்களை ஹாலிலேயே உட்கார வைத்துவிட்டு, பாதுகாப்பிற்கு காவலர்களை நியமித்தார். நானும்,

ஆய்வாளரும் மற்றும் இதர காவல் குழுவினரும் ஹாலுக்கு மேற்கே உள்ள வட்டார போக்குவரத்து அலுவலர் இருக்கும் அறைக்கு, நான் ஆய்வாளருடன் சென்று பார்த்தபோது அறையில் யாரும் இல்லை. பின்னர், விசாரிக்கும்போது RTO பணியிடம் தற்போது காலியாக உள்ளதாகவும, சிதம்பரம் RTO கூடுதல் பொறுப்பாக பணியாற்றுவதாகவும் சொன்னார்கள். தொடர்ந்து மோட்டார் வாகன ஆய்வாளர் முன்னிலையில் வட்டார போக்குவரத்து அலுவலர் அறையை சோதனை செய்ய அதில் பணம் எதுவும் இல்லை. பின்னர் அலுவலகத்தின் வடக்கே உள்ள அலுவலக அறையை சோதனை செய்ய சென்றபோது, அந்த அறையில் வடக்கு பார்த்து அமர்ந்திருந்த நபரை விசாரிக்க 'தனது பெயர் S.சீனிவாசன், வயது 44, இளநிலை உதவியாளர், C-4 சீட், வீட்டு முகவரி பிளாட் நெ.12, VKA நகர், அம்மாபேட்டை, சிதம்பரம் என்று சொன்னார். அவருக்கு பக்கத்து கேபினில் உள்ள நபரை விசாரிக்க தனது பெயர் P.மணிமேகலை, வயது 40, கண்காணிப்பாளர், C பிரிவில் பணிபுரிவதாகவும், தான் மாரியம்மன் கோயில் தெரு, நத்தப்பட்டு கிராமம், கடலூர் என்ற முகவரியில் வசிப்பதாகவும், தான் C பிரிவு அலுவல்களை மேற்பார்வை செய்வது தனது பணி என தெரிவித்தார். அவருக்கு வலதுபுறம் இருந்த கேபினில் இருந்த நபரை விசாரிக்க தனது பெயர் V.ராஜேஷ், (வயது 40), த/பெ. விஜயராகவன், இளநிலை உதவியாளர், தபால் பிரிவில் பணிபுரிவதாகவும், தான் நெ.3/2A,பஜனை மடம் தெரு, தொண்டமாணத்தம் கிராமம், கடலூர் என்றும் தெரிவித்தார். அப்பிரிவில் இருந்த மற்றொரு நபரை விசாரிக்க, தனது பெயர் S.ஜெகநாதன் (வயது 49), த/பெ.சுந்தர்ராஜன், இளநிலை உதவியாளர், அனுப்புவை பிரிவில் பணிபுரிவதாகவும், தான் நெ.19/20, திருவள்ளுவர் தெரு, சிதம்பரம் என்ற முகவரியில் வசித்துவருவதாகவும் தெரிவித்தார். வட்டார போக்குவரத்துவரத்து அறைக்கு வெளியே இருந்த நபரை விசாரிக்க தனது பெயர் P.மீனா, வயது 41, க/பெ.K.பன்னீர்செல்வம், அலுவலக உதவியாளராக பணிபுரிவதாகவும், தான் நெ.2, தில்லை நகர், சிதம்பரம் என்ற முகவரியில் வசித்து வருவதாகவும் தெரிவித்தார். பின்னர் ஹாலில் இருந்த நபர்களை ஒவ்வொருவராக விசாரிக்க, 1)J.தமிழ்மணி, வயது 50, த/பெ. ஜெகநாதன், நெ.259, நெல்லிக்குப்பம் மெயின் ரோடு, கோண்டூர், கடலூர் என்றும், ஸ்ரீதேவி டிரைவிங் ஸ்கூல் உரிமையாளராக இருப்பதாகவும் மற்றும் புரோக்கராக இருப்பதாகவும் தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.8,500/– (500 x 14, 200 x 6, 100 x 3) பணம் இருந்தது. பணம் சம்மந்தமாக விசாரிக்க வழக்கம் போல் லைசன்ஸ் மற்றும் இதர பணிகளுக்கு, பணிமுடிந்த பிறகு மோட்டார் வாகன ஆய்வாளருக்கு லஞ்சம் கொடுப்பது வழக்கம். மேற்சொன்ன பணம் லஞ்சம் கொடுப்பதற்காக வைத்திருந்ததாக சொன்னார். மேலும், அவர் தானாக முன்வந்து ஒரு துண்டு வெள்ளை சீட்டை எடுத்து கொடுத்தார். அதை பார்க்க அந்த சீட்டில் வரிசையாக பெயர்களை எழுதியிருந்தார். பெயர்களின் விவரம், மரகதம், பிரியா, மணிபாரதி, குணசேகர், சௌந்தர்யா, சரண்யா,

வசந்தராஜ், அருள், செல்வதுரை, ராமநாதன், சூர்யா, சுபாசந்திரன், கீர்த்தனா, துரை, குணசேகர், சந்தோஷ்குமார். நித்யா, சக்திவேல், சீனுவாசன் என தனது கைப்பட எழுதியதாக தெரிவித்தார். இப்பெயர்களை பற்றி விசாரிக்க மேற்சொன்ன அனைவருக்கும், தன் மூலம் தான் லைசன்ஸ் அப்ளை செய்து, அவர்களுக்கு லைசன்ஸ் வாங்கி கொடுத்தாகவும் தெரிவித்தார். மேலும் மேற்சொன்ன பெயர்களில் வசந்தராஜ தவிற மற்ற அனைவருக்கும் லைசன்ஸ் பெற்று தந்துவிட்டதாகவும், அதற்கு அடையாளமாக பெயர்களுக்கு முன் டிக் செய்துள்ளேன் என தெரிவித்தார். 2)E.அருளானந்தம், வயது 50, த/பெ. இருதயம், 44, ஆல்பேட்டை, மஞ்சக்குப்பம், கடலூர் என்றும், தான் RTO அலுவலகத்தில் புரோக்கராக இருந்துவருவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.2,000/– (500 x 3, 200 x 2, 100 x 1) பணம் இருந்தது. பணம் சம்மந்தமாக விசாரிக்க வழக்கம் போல் லைசன்ஸ் மற்றும் இதர பணிகளுக்கு, பணிமுடிந்த பிறகு மோட்டார் வாகன ஆய்வாளருக்கு லஞ்சமாக கொடுப்பதற்காக வைத்திருந்ததாக சொன்னார். 3)M.சரவணன், வயது 50, த/பெ. முருகேசன், தெற்கு தெரு, கீழ் சாத்திப்பட்டு, பண்ருட்டி தாலுக்கா என்றும், தான் RTO அலுவலகத்தில் புரோக்கராக இருப்பதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.2,060/– (500 x 3, 200 x 2, 20 x 8) பணம் இருந்தது. பணம் சம்மந்தமாக விசாரிக்க வழக்கம் போல் லைசன்ஸ் மற்றும் இதர பணிகளுக்கு, பணிமுடிந்த பிறகு மோட்டார் வாகன ஆய்வாளருக்கு லஞ்சம் கொடுப்பது வழக்கம். மேற்சொன்ன பணம் லஞ்சம் கொடுப்பதற்காக வைத்திருந்ததாக சொன்னார். 4) P.சரத்ராஜ், வயது 28, த/பெ. பொற்செழியன், தான் RTO டிரைவராக (Out sourcing) ஆக பணிபுரிந்து வருவதாகவும், தான் நெ.14, பகவதி அம்மன் கோயில் தெரு, வில்வநகர், கடலூர் என்ற முகவரியில் வசித்து வருவதாகவும் தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.11,000/– (500 x 16, 200 x 2, 100 x 26) பணம் இருந்தது. தொடர்ந்து அவர் ஒரு சிறிய வெள்ளை காகிதத்தில் தனி நபர்களின் பெயர்கள் எழுதிய சீட்டை எடுத்து கொடுத்தார். அந்த சீட்டை பார்க்க Raja-400. Elango – 400, Duck -500, Kathir-200, Karthi-500, Salam-3000, Selvam-3000, Tamilmani-3000 என கையால் எழுதப்பட்டிருந்தது. அது பற்றி விசாரிக்க, மேற்கண்ட நபர் அனைவரும் RTO அலுவலகத்தில் தனி நபர் புரோக்கர்களாக இருப்பதாகவும், அவர்கள் அனைவரும் பணியில் இருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் A.சோமசுந்தரம் அவர்களுக்கு கொடுக்கவேண்டிய லஞ்சப் பணத்தினை எடுத்துவந்து தன்னிடம் கொடுத்ததாகவும் சொன்னார். தொடர்ந்து ஆய்வாளர் சோமசுந்தரம், புரோக்கர்களிடமிருந்து அவருக்குரிய லஞ்சப் பணத்தை தன்னைத்தான் வாங்க சொல்லுவார் என்றும், பின்னர் அலுவலக பணி முடிந்து செல்லும்போது லஞ்சப்பணத்தை என்னிடமிருந்து வாங்கி செல்வார் என்றும், தொடர்ந்து என்னிடம் எந்தெந்த புரோக்கர்கள் எவ்வளவு பணம் கொடுத்தார்கள் என்பதை என்னிடம் கொடுத்த லஞ்சப் பணத்தின் விவரத்தை நான் எனது

கைப்பட மேற்சொன்ன வெள்ளை காகிதத்தில் எழுதி வைத்திருந்தேன் என்றும் தெரிவித்தார். தொடர்ந்து, RTO அலுவலக அறையின் தெற்குபுறம் இருந்த வட்டார போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளர் அறை காலியாக இருந்தது. அது பற்றி விசாரிக்க மேற்படி நேர்முக உதவியாளர் பணி காலியாக இருப்பதாக தெரிவித்தார்கள். தொடர்ந்து அந்த அறையை சோதனையில் பணம் எதுவும் இல்லை. தொடர்ந்து தெற்குபுறமாக இருந்த சிமெண்ட் காங்ரிட் செல்ப் கொண்ட கிழக்கு பக்கமாக பார்த்த செல்பில் ஆவணங்கள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தது. செல்பின் அளவானது சுமார் 30 x 7 அடி அளவில் இருந்தது. செல்பில் இருந்த ஆவணங்களை சோதனையிட இரண்டு இடங்களில் ஆவணங்களுக்கு அடியில் சந்தேகத்திற்கு இடம் அளிக்கும் வகையில் பணம் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. முதலில் சுருட்டி வைக்கப்பட்டிருந்த பணத்தை எடுத்து எண்ணி பார்க்க ரூ.5000 (500 x 6, 200 x 2, 50 x 17, 20 x 25, 10 x 25) இருந்தது. இரண்டாவதாக ஆவணங்களுக்கு அடியில் இருந்த பணத்தை எடுத்து எண்ணி பார்க்க ரூ.4060 (500 x 3, 200 x 4, 100 x 15, 50 x 4, 10 x 6) இருந்தது. தொடர்ந்து தெற்குபுற ஹாலில் இருக்கையில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க தனது பெயர் R.ரவிசங்கர், வயது 45, த/பெ. C.K.ராதாகிருஷ்ணன், கண்காணிப்பாளர், A பிரிவு என்றும், தான் நெ.50, சரவணா நகர், திருப்பாபுலியூர், கடலூர் என்றும், மற்றொரு நபரை விசாரிக்க, M.சக்திவேல், வயது 58 த/பெ P.மனோகரன், கண்காணிப்பாளர், B பிரிவு என்றும், தான் நெ.5, ராஜா நகர் விரிவாக்கம், ராகவன்பேட்டை, விழுப்புரம் வசித்து வருவதாகவும் தெரிவித்தார். தொடர்ந்து அவர்களுக்கு பின் இருக்கைகள் காலியாக இருந்தது பற்றி விசாரிக்க ஆறு உதவியாளர் பணியிடங்கள் காலியாக உள்ளதாக தெரிவித்தார். தொடர்ந்து இவ்வலுவலகத்தின் முதல் மாடியில் சென்று பார்க்க வடக்கு புறத்தில் Data entry மற்றும் photo பிரிவு செயல்பட்டு வந்த இடத்தை சோதனையிட அப்பிரிவு அறையில் பணம் எதுவும் இல்லை. அப்பிரிவு அறையில் பணிபுரிந்தவர்கள் பற்றி விசாரிக்க 1)N.ஜெயபிரகாஷ், வயது 43, த/பெ நாராயணன், 74,சங்கர நாயுடு தெரு, திருப்பாபுலியூர், கடலூர் என்றும், தான் Data entry operator ஆக பணிபுரிவதாகவும், தொடர்ந்து மற்றொரு நபரை விசாரிக்க S.துரைராஜ், வயது 46, த/பெ சுப்புராயலு, 15,நடுத்தெரு, விலங்கல்பட்டு, வானமாதேவி அஞ்சல், கடலூர் என்றும், தான் Data entry operator ஆக பணிபுரிவதாகவும் தெரிவித்தார். தொடர்ந்து RTO அலுவலகத்தின் முன் நின்றிருந்த நபர்களை பற்றி விசாரிக்க 1)R.ஜெயசந்திரன்(2)4), த/பெ. ரமேஷ், நெ.1, சேர்மன் சுந்தரம் நகர், செம்மண்டலம், கடலூர் என்றும் தெரிவித்தார். அவரிடம் இவ்வலுவலகம் வந்த விவரம் பற்றி கேட்க, தான் TN BD 7077, TN 31 BD 6366, TN BD 6474 வாகனங்களுக்கு FC வாங்க வந்ததாகவும் தெரிவித்தார். 2)G.வேல்முருகன், வயது 52, த/பெ. கோவிந்தசாமி, நடுத்தெரு, பத்திரக்கோட்டை, C.N பாளையம் வழி, பண்ருட்டி தாலுக்கா

என்பவரை விசாரிக்க, தனது லைசன்ஸ் சம்மந்தமாக அலுவலகம் வந்ததாக தெரிவித்தார். மேற்சொன்ன இருவரையும் சோதனை செய்யவில்லை. தொடர்ந்து RTO அலுவலகத்தில் சற்று வெளியே நின்றிருந்த நபரை பற்றி விசாரிக்க 1.R.கொளஞ்சியப்பன், வயது 52, த/பெ.ராமசாமி, நெ.50பி, குறிஞ்சி நகர் விரிவாக்கம், செம்மண்டலம், கடலூர் என்றும், தான் TNSTC யில் உதவி பொறியாளராக பணிபுரிவதாகவும் அரசு பேருந்துகளுக்கு FC எடுக்கவேண்டி அரசு பணியாக இவ்வலுவலகம் வந்ததாக தெரிவித்தார். தொடர்ந்து அலுவலகத்தில் பணியில் இருந்த A.சோமசுந்தரம் மோட்டார் வாகன ஆய்வாளரிடம் இவ்வலுவலக வருகை பதிவேட்டை கேட்க, பதிவேட்டை கொடுத்தார். வருகை பதிவேட்டில் அக்டோபர் 16ம் தேதியில் அலுவலகத்திற்கு வருகை புரிந்த அலுவலர்கள் தங்களது வருகைக்கான சுருக்கொப்பமிட்ட விவரம் பதிவாகி இருந்தது. மேலும், வருகை பதிவேட்டில் நேர்முக உதவியாளர் காலத்தில் சுருக்கொப்பம் பதிவாகி இருந்தது. நேர்முக உதவியாளர் பணியிடம் காலியாக இருக்கும்பட்சத்தில், சுருக்கொப்பம் பதிவாகியிருந்த விவரம் பற்றி கேட்க, இவ்வலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரியும் M.சக்திவேல், நேர்முக உதவியாளர், (கூடுதல் பொறுப்பு) வகித்து வருவதாகவும் தெரிவித்தார். தொடர்ந்து மோட்டார் வாகன ஆய்வாளரிடம் அலுவலகத்தில் பராமரிக்கப்படும், பணியாளர்கள் பண கையிருப்பு பதிவேட்டை கேட்க, மேற்சொன்ன பண கையிருப்பு பதிவேட்டை எடுத்து கொடுத்தார். மேற்சொன்ன இரு ஆவணங்களும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்கண்ட சோதனையின் போது மொத்தம் ரூ.32,620/– கைப்பற்றப்பட்டது. சோதனையின் போது கைப்பற்றப்பட்ட பணம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு கொடுத்த மற்றும் கொடுக்கவேண்டிய லஞ்சப்பணம் என ஊர்ஜிதம் ஆகிறது. மேற்படி பணம் கைப்பற்றப்பட்டது தொடர்பாக மோட்டார் வாகன ஆய்வாளரிடம் தெரிவித்து விளக்கம் கேட்டபோது, மேற்படி பணம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என தெரிவித்தார். இந்த நிகழ்வுகள் தொடர்பாக திடீர் ஆய்வு மகஜர் மதியம் சுமார் 16.30 மணி முதல் இரவு சுமார் 21.00 மணி வரை பதிவு செய்யப்பட்டது. மேற்படி சோதனையின் போது என்னாலோ, என்னுடன் வந்த கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு ஆய்வாளர் மற்றும் அவர்களது குழுவினராலோ கடலூர் வட்டார போக்குவரத்து அலுவலர் அலுவலகத்தில் எனது தலைமையில் ஆய்வு குழு சோதனை செய்த போது எந்தவித ஆவணங்களையோ, பொருட்களையோ சேதப்படுத்தவில்லை. அவைகளை இருந்த நிலையிலேயே வைக்கப்பட்டது: மேலும் எங்களது மேற்படி ஆய்வின் போது கடலூர் வட்டார போக்குவரத்து அலுவலர் அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்ளவில்லை. இன்று 17.10.2020ந் தேதி காலை 10.30 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் நேரில் வந்து, 16.10.2020ந்தேதி கடலூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மேற்படி திடீர் ஆய்வு சம்மந்தமாக சட்டப்பூர்வ நடவடிக்கை

எடுக்க வேண்டி, திடீர் ஆய்வின்போது தயார் செய்யப்பட்ட அசல் திடீர் ஆய்வு மகஜர், ஆய்வின்போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.32,620/– மற்றும் திடீர் ஆய்வு மகஜரில் குறிப்பிட்டுள்ள கைப்பற்றப்பட்ட இரண்டு ஆவணங்களை இத்துடன் இணைத்து உரிய நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்படுகிறது. மேலும் இது சம்மந்தமாக பதிவு செய்யும் வழக்கின் விவரம் பின்னர் தெரியப்படுத்துமாறும் இதன் மூலம் கேட்டுக்கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள (அ. அமுதா) உதவி ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம், கடலூர். அய்யா, நான் இன்று 17.10.2020 பகல் 11.00 மணிக்கு மேலே கண்ட புகார் மனுவை பெற்று, கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.06/2020, சட்டபிரிவு 7, 7A, 12 ஊழல் தடுப்பு (திருத்தியமைக்கப்பட்ட) சட்டம் 2018 ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதன் அசலை, வாதியின் புகார் மனுவுடன் இணைத்து, கணம் தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, கடலூர் அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

17.10.2020.
(தி. சண்முகம்),
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க பிரிவு, கடலூர்.